34

ப்ரியா கல்யாணராமன்




**சாந்தமாகவே எப்போதும் இருக்கும் சத்குருவையே கோபப்பட வைத்த அந்தக் கேள்வி என்ன தெரியுமா?**

இதோ இதுதான்.

"சத்குரு, கைலாஷின் உச்சிக்கு மலையேறிச் செல்ல நார்வே குழு ஒன்று முயற்சி செய்ததாக ஒரு செய்தி படித்தேன். அப்படிச் செய்வது சரியா?"

அவ்வளவுதான். சத்குருவின் முகமே மாறிவிட்டது. கண்கள் சிவந்தன. கை நடுங்கியது போல் உணர்ந்தேன் .சடக்கென எழுந்தவர் குறுக்கும் நெடுக்குமாக நடந்தார்.

நான் அப்படியே விதிர்விதிர்த்து பேசாமல் நின்றேன்.

'ஐந்து நிமிடம் கழித்துத்தான்

**இதயத்திலும் மனத்திலும் உயிர்ப்போடு வைத்திருங்கள்**

சத்குரு சகஜ நிலைமைக்கு வந்தார். என் கேள்விக்குப் பதிலைச் சொல்ல ஆரம்பித்தார்.

"இந்த மனிதர்களுக்கு ஒரு பைத்தியம். எதைப் பார்த்தாலும் அதன் மேல் ஏறி உட்கார வேண்டும் என்கிற பைத்தியம். அதன் மேல் போய் உட்கார்ந்து, தன்னுடைய காலடியை அங்கே வைத்துவிட்டு வந்தால் , அவனுடைய அகங்காரத்திற்கு ஒரு திருப்தி.

கோடிக்கணக்கான மக்கள் தெய்வீகமானது என்பதை உணர்ந்து , பெரிய மரியாதையுடன், தீராத பக்தியுடன் வணங்கும் ஓர் இடத்தின் மேலே போய் நான் காலை வைக்கப் போகிறேன்

## கைலாஷ் - நம் முன்னேற்றத்தின் கருவி

என்று சொல்பவர்களை என்னவென்று சொல்வது?

புனிதமான நம் நாட்டில் நமக்கு என்ன சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள்? ஒரு சாதாரண புத்தகத்தைத் தெரியாமல் மிதித்துவிட்டால் கூட நாம் தொட்டுக் கும்பிடுகிறோம். சிறு வயதிலிருந்தே நமக்கு இப்படிச் சொல்லிக் கொடுக்கிறார்கள்.

அப்படி என்றால் புத்தகத்தில் கடவுள் இருக்கிறாரா? அப்படியில்லை. நம்முடைய முன்னேற்றத்திற்கு எவையெல்லாம் முக்கியமான காரணமாக இருக்கிறதோ, அதையெல்லாம் நாம் மரியாதையாகப் பார்க்க வேண்டும் என்று ஒரு கலாசாரமாக நமக்குச் சொல்லிக்



ஒரு விழாவில்

கொடுக்கப்பட்டிருக்கிறது.

கைலாஷ் நம்முடைய முன்னேற்றத்திற்கு ஒரு பெரிய கருவி. அதன் மேல் போய் காலை வைப்பது என்று நினைப்பதே முட்டாள்தனமானது. அதனால் கயிலாயம் ஒன்றும் கெட்டுப்போகாது. இப்படி செய்ய நினைப்பதுதான் முட்டாள்தனம்.

உலகத்தில் எவ்வளவோ மலைகள் இருக்கின்றனவே. அங்கெல்லாம் போய் ஏற வேண்டியதுதானே? மனிதனின் அகங்காரம் இது. யாராவது ஒருவர், திறமையிலோ, கல்வியிலோ, சாமர்த்தியத்திலோ சிறப்பாக இருக்கிறார் என்றால் அவரை மட்டம் தட்டி, அவர் தலையில் கால் வைக்கவேண்டும் என்று சிலருக்கு ஆசை. இது ஒன்றும் சாதனை கிடையாது. போய் எவரெஸ்ட் ஏற வேண்டியதுதானே? மக்கள் புனிதமான தன்மையை




உணர்ந்து, வழிபடும் கைலாஷ் மேல் ஏற முயற்சிப்பது முட்டாள்தனம். அடிமுட்டாள்தனம், அவ்வளவுதான்." கொஞ்சம் டென்ஷனுடனேயே சத்குரு பதில் சொன்னதை நான் உணர்ந்தேன்.

சத்குருவுக்கு மிகவும் பிடித்த மௌனத்தைக் கொஞ்ச நேரம் கடைப்பிடித் தேன். அவரையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

இன்னும் ஒரு கேள்வி இருப்பதாகச் சொன்னீர்களே, அதைக் கேளுங்கள்," என்று புன்னகைத்தார் சத்குரு.

கடைசி அத்தியாயத்தின் கடைசிக் கேள்வியைக் கேட்டேன்.

"கைலாஷ் சென்று வந்தவர்கள் வாழ்க்கையில் எப்படி இருக்க வேண்டும்?"

"நல்ல கேள்வி" என்று சிரித்தவர் பேச ஆரம்பித்தார். " கைலாஷ் யாத்திரை சென்று வருவது என்பது மட்டுமே ஒரு சாதனையில்லை. உங்களிடமுள்ள கோபம், வெறுப்பு, பொறாமை போன்ற தீய விஷயங்களில் குறைந்தபட்சமாவது இழக்க வேண்டும். கோபப்பட்டே பழகியவர்கள் அத்தனை சுலபமாகக் கோபத்தை விட முடியாதுதான். ஆனால் இனி **கோபம் வரும்போது கெட்ட வார்த்தைகளைப் பிரயோகிக்கக்கூடாது என்றாவது முடிவெடுக்கலாம். அல்லது வாயை மூடிக்கொண்டிருக்கலாம்.** (சிரிக்கிறார்.)

கைலாஷிலிருந்து திரும்பும்போது தண்ணீர், கூழாங்கற்கள் மட்டுமில்லாமல் கொஞ்சம் கைலாஷையும் உங்களுடன் எடுத்து வருவீர்கள் என்று நினைக்கிறேன். உங்கள் இதயத்திலும் மனதிலும் அதை உயிர்ப்போடு வைத்துக் கொண்டிருந்தாலே, உங்கள் வாழ்வில் அது பெரும் மாற்றங்களைக் கொண்டு வரும்.

எனக்குத் தெரிந்து சிலர், வாழ்வில் பயங்கர துன்பம் நேரும் சமயம், இந்தக் கைலாஷ் பயணத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். இந்த ஒரு பயணம், அவர்களின் முயற்சி அதிகம் இல்லாமலேயே அவர்களின் வாழ்வை மாற்றி மேம்படுத்தி உள்ளது. காரணம் அவர்கள் கைலாஷின்

சின்ன ஒரு பகுதியை அதன் அதிர்வைத் தங்களுடன் எடுத்துச் சென்றதுதான். நீங்களும் அப்படிச் செய்தால், **அது உங்கள் வாழ்வில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும். நீங்கள் பார்ப்பதையும், அறிந்து கொள்வதையும் விட அங்கே அதிக விஷயம் இருக்கிறது.**" சொல்லி முடித்த சத்குரு "குமுதம் வாசகர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவியுங்கள்." என்றார்.



ஒரு கைலாயக் காட்சி

தலை வணங்கி அந்த வாழ்த்துக்களை ஏற்றுக் கொண்டேன்.

இதோ என் கைலாஷ் யாத்திரை இறுதிக் கட்டத்திற்கு வருகிறது. இந்த திராபுக் ஆசிரமத்திலிருந்து வந்த வழியே செல்ல வேண்டியதுதான். ஊருக்குச் செல்ல ஒரு வாரம் ஆகும்.

ஆமாம். நடந்து அடிவாரம் வரை சென்று, அங்கே எங்களுக்காகக் காத்திருந்த டயோட்டா லாண்ட் க்ரூஸர் காரில் ஏறி வந்த வழியே திபெத்திய பாலைவனம் மலைச்சாரல், சோலைவனம், என்று எந்த ஊர்களில் எல்லாம் இரவு தங்கினோமோ அதே ஊர்களில் தங்கி, (பரயாங், சாகா, ஜாங்மு) நேபாளம் வந்து சேர்ந்தோம். பத்திரமாய் எங்களை அழைத்துச் சென்ற திபெத்திய டிரைவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாகப் பரிசுகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்தோம். நேபாளத்தில் மேலும் சில ஆலயங்களை தரிசனம் செய்தோம். எங்கள் குழுவினரிலேயே உற்சாகமான பயணி யார்?, டென்ஷன் பார்ட்டி யார்? ரஜினி ஸ்டைல் யார்? மிஸ்டர் கூல் யார்? மிஸ்டர் லொடலொட யார்? என்றெல்லாம் ஜாலியாய்ப் பரிசுகள் கொடுத்துக் கைதட்டி மகிழ்ந்தோம். பாடல் போட்டு அனைவரும் நடனமாடினோம்.

**குமுதம் வாசகர்களுக்கு வாழ்த்துக்கள்**

இன்னும் சொல்ல எத்தனையோ உண்டு.

விவேக் என்ற சக பயணி, யார் என்ன உதவி கேட்டாலும் கொஞ்சம் கூட அலுத்துக் கொள்ளாமல் ஓடி ஓடிச் செய்தார். எங்களுடன் வந்த லதா பாண்டித்துரை, விவேக்கின் கையைப் பிடித்துக் கொண்டு, நெகிழ்ந்து, 'சொந்தக்காரர்களுக்கே உதவ அனைவரும் தயங்கும்போது, யார் யாருக்கோ நீங்கள் செய்யும் தொண்டு மெய்சிலிர்க்க வைக்கிறது' என்று கண் கலங்கியதைச் சொல்லவா?

திபெத் சாப்பாடு எல்லாமே உப்புச் சப்பில்லாமல் இருக்கும் என்பதால், திருச்சி நீலக் குமார் ரகசியமாக காரமான ஊறுகாய்களை கொண்டு வந்து அனைவருக்கும் தந்துதவ, அதை சத்குரு கண்டுபிடித்து, "சிலர் ஊறுகாய் சாப்பிடுகிறீர்கள் போலிருக்கிறது. பாருங்கள். நம்மால் பத்து நாள் கூட நாக்கைக் கட்டுப்படுத்த முடியவில்லை. **என்னமோ நாமெல்லாம் புலனடக்கம் தெரிந்தவர்கள் என்று நினைத்திருந்த மாயை எல்லாம் உடைந்து சிதறுகிறது பாருங்கள்.**" என கிண்டல் அடிக்க, நீலக் குமார் அண்ட் கோ வெட்கத்துடன் ஊறுகாயைத் தூக்கியெறிந்ததைச் சொல்லவா?

கைலாஷின் நினைவாகப் பலரும் அங்கே கிடந்த கற்களைப் பொறுக்கிக்கொள்ள, "கைலாஷின் முன்னால் கற்களாகப் பிறக்க அவை எத்தனை தவம் செய்து இங்கே வந்ததோ? அவற்றை இங்கிருந்து பிரித்து நம் ஊருக்கு எடுத்துச் செல்வது சரியா?." என்று போகிறபோக்கில் சதீஷ் சொன்ன தத்துவத்தைச் சொல்லவா?



திபெத் சிறுமிகள்

இதுபோல் நூறு சம்பவங்கள், நூறு நினைவுகள், அவற்றையெல்லாம் ஆசையுடன் அசை போட்டபடியே காத்மண்டுவிலிருந்து டெல்லி வந்து, அங்கிருந்து நம் சிங்காரச் சென்னை! (இட்லி வடை சாப்பிட்டு எத்தனை நாளாச்சு!)

**என்றென்றும் உற்சாகம் தொடரட்டும்**

நண்பர் சுப்ரமணியுடன் மயிலாப்பூர் வழியாக வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்தபோது, மயிலை கபாலீஸ்வரர், கோயில் கோபுரத்தில் நியான் விளக்குகளில் " மயிலையே கயிலை. கயிலையே மயிலை' என்ற எழுத்துக்கள் மின்னியதைப் பார்த்தபோது மெல்லிய புன்னகை என்னுள் எழுந்தது.

அந்த கயிலாயக் கடவுள் அனைவரையும் காத்து ரட்சிக்க வேண்டும் என்று கை கூப்பித் தொழுதபடியே இந்த இனிய தொடரை நிறைவு செய்கிறேன்.



**என்றென்றும் உற்சாகம் தொடரட்டும். சம்போ சிவ சம்போ !! ஹரி ஓம்.**